# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.329/2016
## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 3 |
| Name | : Thiru.Elisammal |
| Husband's Name | : ஜோசப் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2021.

**முதல் விசாரணை -**

நான் சூசையப்பர் கோயில் தெரு, கே.கே.புதூரில் வசித்து வருகிறேன். நான் தற்பொழுது காப்பகத்தில் சமையல் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.11.2014 அன்று காலை 08.00 மணியளவில் நானும் எனது அண்ணனும் பஸ்ஸில் கே.கே.புதூரில் இருந்து பூந்தமல்லிக்கு சென்றிருந்தோம். மாலை சுமார் 06.00 மணியளவில் எனது அண்ணனுடன் காரில் மறுபடியும் கே.கே.புதூருக்கு திரும்பி வந்து கொண்டிருந்தோம். மறைமலைநகரில் வீட்டிற்கு சாமான் வாங்குவதற்காக எனது அண்ணன் ரோட்டைக் கடக்க முற்பட்டார். அப்பொழுது சாலையில் U டெர்ன் எடுத்து வந்த பஸ் ஒன்று எனது அண்ணன்மீது மோதி அவர் தூக்கி வீசப்பட்டார். உடனடியாக போலிசார் ஆம்புலன்சில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். நானும் மருத்துவமனைக்கு பஸ் ஏறிச் சென்றேன். மறுபடியும் மேல்சிகிச்சைக்காக சாய்ராம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். எனது அண்ணனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மறுநாள் காலை 10.00 மணியளவில் எனது அண்ணன் இறந்து விட்டார் என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். எனது அண்ணன் மீது மோதிய வாகனம் கல்லூரி வாகனம் போல் இருந்தது. எனது அண்ணன் மகனும் நானும் காவல் நிலையம் சென்று அன்றைய தினமே புகார் கொடுத்தோம். தற்பொழுது புகாரில் காட்டப்படும் கையெழுத்து என்னுடையதுதான். புகாரை அங்கிருந்த ஒருவர் எழுதிக்கொடுத்தார். அதில் நான் கையொப்பம் செய்தேன். அந்த புகாரானது அசாஆ 2 ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகின்றது. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை -**

சாய்ராம் மருத்துவமனைக்கு எனது அண்ணனை மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றதை தற்பொழுது முதல் விசாரணையில் சொன்ன விஷயத்தை போலிஸ் விசாரணையில் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லி உள்ளேன். உங்கள் அண்ணனுக்கு இதய சம்பந்தமான நோய்கள் ஏதேனும் இருந்ததா என்றால் சாட்சி இல்லை என்கிறார். விபத்து நடந்த பகுதி மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி மற்றும் கடைகள் அதிகம் உள்ள பகுதி என்று சொன்னாலும் சாட்சி ஆமாம் என்கிறார். சம்பவ இடமானது பாதசாரிகள் கடக்கும் பகுதி அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. நீங்களும் உங்களது அண்ணனும் ரோடு மீடியம்மீது நின்று கொண்டிருந்தீர்களா என்றால் எல்லோரும் நின்று கொண்டிருந்த ரோட்டைக் கடக்கும் பகுதியில்தான் நின்று கொண்டிருந்தோம். நீங்களும் உங்கள் அண்ணனும் சாலையில் மீடியனில்தான் நின்று கொண்டிருந்தீர்கள் என்று சொன்னால் சாட்சி அப்படி இல்லை என்கிறார். நீங்கள் தற்பொழுது சொல்லி உள்ள விவரத்தை உங்களுடைய போலிஸ் விசாரணையில் சொல்லி உள்ளீர்களா என்றால் சாட்சி சொல்லி உள்ளேன் என்கிறார். விபத்தானது அரசு பேருந்து ஒன்று தனியார் பேருந்தின்மீது மோதியதால் தனியார் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சாட்சி இருக்கலாம், ஆனால் தனியார் பேருந்து தான் எனது அண்ணன்மீது மோதியது என்று சாட்சியம் அளிக்கிறார். புகார் சம்பவம் நடந்து ஒருநாள் கழித்துதான் கொடுக்கப்பட்டது என்றால் சாட்சி ஆமாம் என்கிறார். காவல் நிலையத்தில் இருந்த ஒருநபர்தான் புகாரை எழுதிக் கொடுத்தார். அவர் காவலரா அல்லது இல்லையா என்பது எனக்கு தெரியாது. அந்த புகாரை காவலர்தான் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் அது சரியல்ல. உங்கள் அண்ணனுக்கு இதய நோய் இருந்தது என்று சொன்னால் அது சரியல்ல. போலிசார் நான் புகார் கொடுத்த அன்றே என்னை விசாரித்தார்கள், அதைத்தவிர வேறொரு நாளும் என்னை விசாரித்தார்கள். மறைமலைநகர் காவல் நிலையத்தில் வைத்துதான் என்னை விசாரணை செய்தார்கள். இந்த விபத்தை ஏற்படுத்தியதே அரசு பேருந்தான். அந்த அரசு பேருந்துக்கு இன்சூரன்ஸ் இல்லாத காரணத்தினால் தனியார் பேருந்து மோதியதாக வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. இறந்து போன நபருக்கு காப்பீடு பெறுவதற்காகவே புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.

# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.329/2016
## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 4 |
| Name | : Thiru.Arokiaraj |
| Father's Name | : செல்வராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2021.

**முதல் விசாரணை -**

நான் குமணஞ்சாவடியில் வசித்து வருகிறேன். நான் அமேசான் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.11.2014 அன்று எனது சித்தப்பாவும் அத்தை சாந்தியும் எனது அத்தையினுடைய சடங்கிற்கு குமனஞ்சாவடி சென்றார்கள். காரில் சென்று கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்கள் சென்ற காரின் பின்னால் வேனில் வந்து கொண்டிருந்தோம். சிங்கபெருமாள் கோயில் அருகே எனது சித்தப்பா டிபன் வாங்குவதற்காக காரை விட்டு இறங்கினார். சாலையைக் கடப்பதற்காக நின்று கொண்டிருந்தார். அப்பொழுது பிரைவேட் பஸ் ஒன்று U டெர்ன் அடிப்பதற்காக அப்பொழுது கவர்ன்மென்ட் பஸ் ஒன்று பிரைவேட் பஸ் மீது தட்டியது. அப்பொழுது எனது சித்தப்பாவின்மீது பிரைவேட் பஸ் மோதியது. எனது சித்தப்பாவை மருத்துவமனைக்கு அம்புலன்சில் வைத்து செங்கல்பட்டு பொது மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு முடியாது என்று சொன்னதினால் பொத்தேரியில் உள்ள எஸ்ஆர்எம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். நவம்பர் 19 அன்று எனது சித்தப்பா இறந்து விட்டார். போலிசார் என்னை விசாரணை செய்ய வில்லை.

**குறுக்கு விசாரணை -**

வழக்கில் இன்சூரன்ஸ் தொகை பெறுவதற்காகத்தான் நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் அது சரியல்ல. உங்கள் அத்தை பெயர் என்ன என்றால் சாட்சி சாந்தி என்கிறார். வழக்கைப் பற்றி உங்களுக்க எதுவும் தெரியாது என்றாலும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னாலும் அது சரியல்ல. சம்பவம் குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் கேள்விப்பட்டுதான் சொல்கிறீர்கள் என்று சொன்னாலும் சாட்சி ஆமாம் என்கிறார்.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.329/2016**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 5 |
| Name | : Thiru.Victor Antony |
| Father's Name | : சகாயம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2021.

**முதல் விசாரணை -**

நான் தண்டலத்தில் வசித்து வருகிறேன். நான் டெய்லர் வேலை செய்து வருகிறேன். இருதயராஜ் அவருடைய தங்கையை விடுவதற்காக சென்னையிலிருந்து மதுராந்தகம் சென்றார். மளிகை சாமான் வாங்குவதற்காக இருதயராஜ் அவர் சென்ற காரை விட்டு இறங்கி ரோட்டைக் கடக்க முயன்றார். ரோட்டின் நடுவில் அவர் நின்றபொழுது பஸ் ஒன்று U டெர்ன் அடிப்பதற்காக திரும்பும்போது அவர்மீது மோதியது. அதன்பிறகு செங்கல்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு முடியாது என்று சொல்லி விட்டதால் எஸ்ஆர்எம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மறுநாள் காலை அவரது கைப்பேசி காணவில்லை என்று சம்பவ இடம் சென்றோம். அப்பொழுது மறைமலைநகர் போலிசார் அங்கு வந்து மார்க் செய்து கொண்டிருந்தார்கள். அதன்பிறகு போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னுடன் பிரகாஷ் என்பவரும் வந்திருந்தார். நான் கையெழுத்திட்ட பார்வை மகசரானது அசாஆ 3 ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகின்றது.

**குறுக்கு விசாரணை -**

இந்த வழக்கில் இறந்துபோன இருதயராஜ் மற்றும் சாட்சிகள்அனைவரும் உங்களுடைய சொந்தக்காரர்களா என்றால் சாட்சி எனக்குத் தெரிந்தவர்கள் என்கிறார். நீங்கள் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பே போலிசார் படம் வரைந்திருந்தனரா என்றால் நான் போனபிறகுதான் வரைந்தார்கள். பார்வை மகசரில் உள்ள விவரங்கள் உங்களுக்குத் தெரியுமா என்றால் எனக்கு

தற்பொழுது ஞாபமில்லை என்கிறார். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் போலிஸ் ஸ்டேஷன் சென்று கையெழுத்து செய்தீர்களா என்றால் காவல் நிலையம் சென்று கையெழுத்து செய்றேன். இந்த சம்பவத்தைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது, சம்பவத்தில் இறந்து போன நபர் உங்களுக்கு தெரிந்த நபர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் அது சரியல்ல. உங்களுடன் பார்வை மகசரில் வேறு யார் கையெழுத்து இட்டார்கள் என்றால் பிரகாஷ் என்பவர் கையெழுத்து இட்டார், இருவரும் காவல் நிலையம சென்று கையெழுத்து செய்தோம்.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.329/2016**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 6 |
| Name | : Thiru.Senthil raj |
| Father's Name | : கெஜபதி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2021.

**முதல் விசாரணை -**

நான் சென்னை ஐயப்பந்தாங்கலில் வசித்து வருகிறேன். நான் கருடா டிராவல்ஸில் மேனேஜராக இருக்கிறேன். சம்பவம் நடந்த அன்று எங்கள் நிறுவனத்திற்கு மறைமலைநகர் காவல் நிலையத்திலிருந்து போன் வந்தது. நான் சென்னையிலிருந்தேன். மறுநாள் தான் காவல் நிலையம் வந்தேன். அடிபட்ட நபரை எஸ்ஆர்எம் மருத்துவமனையில் அனுமதித்திருக்கிறார்கள் என்று போலிசார் என்னிடம் சொன்னார்கள். அதன்பிறகு அவர் இறந்து விட்டார் என்று தகவல் சொன்னார்கள். அதன்பிறகு போலிசார் எங்கள் வண்டியின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னாரர்கள். எங்கள் வண்டியான அசோக் லேலேண்டு பஸ் பதிவெண் டீஎன் 19 7918 கொண்ட பஸ்ஸை ஆஜர் படுத்தினோம். மறுநாள் மோட்டார் வாகன ஆய்வுக்கு பஸ் அனுப்பப்பட்டது. அதன்பிறகு வண்டியை நாங்கள் எடுத்துச்சென்றோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை -**

விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸை நீங்கள் காவல் நிலையம் கொண்டு சென்றீர்களா என்றால் ஏற்கெனவே காவல் நிலையத்தில் தான் பஸ் இருந்தது. காவல் நிலையத்தில் எத்தனை நாள் பஸ் நின்று கொண்டிருந்தது என்றால் 2 நாட்கள் நின்று கொண்டிருந்தது. விபத்தானது அரசு பேருந்து ஒன்று உங்கள் நிறுவன பேருந்தின்மீது மோதியதால்தான் விபத்து ஏற்பட்டதா என்றால் சாட்சி U டேர்ன் அடிக்கும் போது பேருந்து விபத்தை ஏற்படுத்தியது என்கிறார். அரசு பேருந்துக்கு

இன்சூரன்ஸ் இல்லாத காரணத்தினால் உங்கள் நிறுவனத்தின் பேருந்து இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் அரசு பேருந்துக்கு இன்சூரன்ஸ் இருக்கிறதா இல்லையா என்பது எனக்கு தெரியாது, ஆனால் எங்கள் நிறுவன பேருந்துக்கு இன்சூரன்ஸ் கவரேஜ் உள்ளது. கேட்டுக் கொண்டதன் பேரில் வழக்கில் சம்பந்தப்பட்ட நபருக்கு உதவுவதற்காக உங்கள் வண்டியை காவல் நிலையத்தில் ஒப்படைத்தீர்கள் என்று சொன்னால் இருக்கலாம்.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.